புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | நவம்பர் 30, 2017 | புரட்சி 16 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00

## நவம்பர் 26இல் ஜாதி ஒழிப்புக்காக சட்டம் எரித்து சிறையேகிய போராளிகள் நினைவு நாள்

# சூலூரில் சூளுரைத்தது கழகம்




*1957 நவம்பர் 26இல் தமிழ்நாடு முழுதும் அரசியல் சட்டத்தின் ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை எரித்து மொதம் முதல் 3 ஆண்டு வரை சிறையேகிய பெரியார் இயக்கத்தின் போராட்ட வரலாற்றை நினைவுகூர்ந்து சூலூரில் கழகம் பொதுக் கூட்டம் நடத்தியது. போராட்ட வரலாறுகளை கழகத் தலைவர் கொளத்தூர் மணி விரிவாக விளக்கினார். ஜாதி ஒழிப்புப் போராட்டத்தைத் தொடர கழகம் சூளுரைத்தது.*

கோவை மாவட்டம் சூலூரில் 26.11.2017 அன்று ஜாதியை பாதுகாக்கும் அரசியல் சட்டத்தை எரித்த ஜாதி ஒழிப்பு வீரர்கள் நினைவைப் போற்றும் வகையில் மாலை 6.00 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகப் பொதுக்கூட்டம் தொடங்கியது. சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில், சட்ட எரிப்பு போராளி ஆனைமலை ஏ.கே. ஆறுமுகம் முன்னிலையில் மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

மேட்டூர் டிகேஆர் பகுத்தறிவு இசைக்குழுவின் பகுத்தறிவு பறையிசையைத் தொடர்ந்து, சட்ட எரிப்பு நாள் வீரர்களை நினைவு கூர்ந்து திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில் ராசு, பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, கோவை மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் இராமசந்திரன், மடத்துக்குளம் மோகன், கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி உரையாற்றினர். உடுமலை கௌசல்யா நிகழ்வில் சிறப்பு விருந்தினராய் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மிக நீண்ட உரையினை ஆற்றினார். சற்றேறக்குறைய ஒன்றரை மணி நேரம் நீடித்த உரையில் தமிழக நீதிக்கட்சி ஆட்சியின் தொடக்கம், சமூக நீதி வரலாறு, அரசியல் சட்டத்தின் உருவாக்கம், அதன் மீதான புரட்சியாளர் அம்பேத்கரின் பங்களிப்பு, பார்ப்பனர்களின் ஆதிக்கம், அரசியல் சட்டம் தமிழ்மக்களை இழிவாக குறிக்கும் பகுதிகள், அதை எரிக்க வேண்டிய காரணங்கள் ஆகியவற்றை விளக்கினார்.

சட்ட எரிப்புப் போராட்டத்தை நவ 3 ஆம் தேதி தந்தை பெரியார் அறிவித்தவுடன் அதை தடுக்கும் நோக்கில் எரிப்பவர்களுக்கு தண்டனை தர புதிய சட்டப்பிரிவை ஒரு வாரத்தில் உருவாக்கிய பின்னும் ஜாதி ஒழிப்பு வீரர்களின் உறுதி, திண்மை காரணமாய் ஏறத்தாழ 10000த்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சட்டத்தை எரித்து கைதான வரலாறு, காவல்துறையாலும், உள்துறை அமைச்சராலும் அனைவரையும் கைது செய்ய முடியாத இயலாமை ஆகியவற்றிற்கிடையில் 4000த்திற்கும் மேற்பட்டோர் கைதாகி 3 மாதம் முதல் 2 வருடம் வரை சிறையேகிய வரலாற்றினை எழுச்சியோடு எடுத்துக் கூறினார்.

கூட்டம் நடந்து கொண்டு இருக்கும்போது பெய்த மழையில் கூட சிறு சலசலப்பில்லாமல் பொது மக்களும் தோழர்களும் அமர்ந்து உரையை கேட்டு வீரர்களின் தியாகத்தைப் போற்றினர். இறுதியில் தோழர் பாபு நன்றியுரை ஆற்றினார்.

**செய்தி : விஜயகுமார்**

## பெரியார், அரசியல் சட்டத்தை எரித்து அம்பேத்கர் கனவை நிறைவேற்றியிருக்கிறார்


# சூலூர் கூட்டத்தில் உடுமலை கவுசல்யா பேச்சு

எனக்கு உரிமை படைத்த மேடையில் நிற்கும் உணர்வு எனக்கு இங்கே அதிகமாகக் கிடைக்கிறது. இந்த மேடை என்று சொல்வது திராவிடர் விடுதலைக் கழகம் என்ற அர்த்தத்தில் மட்டுமல்ல. சாதி ஒழிப்புக்காக தூய உள்ளத்தோடு உழைக்கிறவர்களான அதுவும் கருஞ்சட்டைகளோடு நிற்கையில் கர்ப்பப்பைக்குள் நிற்பதாகவே உணர முடிகிறது. ஆம் இது எனக்கான இடம், நீங்கள் என் சொந்தங்கள் என்ற உணர்வு இயல்பாகவே வந்து விடுகிறது.

சாதியைப் பாதுகாக்கும் ஐந்து சட்ட விதிகளை பெரியார் கொளுத்திய நாள் இன்று ! அதன் வரலாறு , அடக்குமுறை, வீரச்சாவுகள் குறித்தெல்லாம் எனக்குப் பின்னால் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் பேச இருக்கிறார். நான் புதிதாகக் கற்கத் தொடங்கியுள்ள மாணவிதான். நானும் கற்கத்தான் இங்கே வந்திருக்கிறேன்.

எனக்குத் தெரிந்த சில செய்திகளை கீற்று போன்ற இணையத்தில் படித்து கிடைத்த புரிதல்களை மட்டும் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

பெரியார் ஆணைக்கிணங்க சட்டத்தைக் கொளுத்திய 16 வயதே நிரம்பிய சிறுவன் பெரியசாமி




தன் தாய்க்கு ஒரே மகன். சிறையில் இருந்த அவனை தமிழக கவர்னர் விஷ்ணுராம் மேதி நேரில் வந்த போது பார்த்திருக்கிறார். சிறியவன் என்ற பரிவில் "உன்னை மன்னித்து விட்டுவிடுகிறேன், இனிமேல் இதுபோல் எந்தக் காரியமும் செய்யாமல் இருப்பாயா" என்று கேட்டிருக்கிறார். இதை அவனிடம் தமிழில் சொல்கிறார்கள். அவன், பெரியசாமி, பெரியாரின் இளம் தொண்டன் பதில் சொல்லியிருக்கிறான். வெளியே அனுப்பினால் நான் மீண்டும் சட்டத்தைக் கொளுத்துவேன் என்று. 16 வயது மட்டுமே நிரம்பிய ஒருவன் பெரியார் ஆணை ஏற்று கவர்னரிடம் நெஞ்சம் நிமிர்த்தி அப்படித்தான் கொளுத்துவேன் என்று சொல்லியிருக்கிறான். இந்த உறுதி, வீரம் பெரியாரிடம் இருந்து வந்திருக்கும். கூடுதலாக சட்ட எரிப்புப் போராட்டத்தின் நியாயத்தை முழுமையாக அவன் உணர்ந்திருக்கிறான். அதுதான் அவனுக்கு அந்த துணிச்சலைத் தந்திருக்கிறது. பெரியாரின் பேருழைப்பு, பெரியாரின் தொய்வில்லாத பரப்புரை, அரசியல் கல்வி ஒரு சிறியவனைக் கூட கொள்கை வீரனாக உருமாற்றி இருக்கிறது. கொள்கைத் தெளிவு இருந்தால் சாவின்

(3ஆம் பக்கம்)

### சட்ட எரிப்பு நாளில் பெயர் சூட்டல்

தோழர் லோகு - மீனா இணையர், பெண் குழந்தைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘கனல்விழி’ என்று பெயர் சூட்டினார். கூட்டத்தில் கழகத்துக்கு நன்கொடையாக ரூ.1000/- தோழர்கள் கழகத் தலைவரிடம் வழங்கினர்.

# தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு வேலை கிடையாதாம்!

***டிசம்பர் 1ஆம் தேதி நடக்கவிருக்கும் ஆர்ப்பாட்டங்களில் தோழர்கள் மக்களிடம் விளக்கிப் பேசுவதற்கான சில குறிப்புகள்.***

தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்போர் 85 இலட்சத்துக்கும் அதிகம். ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் குறைந்த ஊதியத்தில் பணி நிரந்தரமின்றி எந்த நேரத்திலும் வேலை இழக்கும் ஆபத்துகளை தலை மேல் சுமந்து நிற்கும் இளைஞர்கள் பல இலட்சம். வளர்ச்சி நோக்கிய திட்டங்கள், புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கும் தொழில் திட்டங்கள் குறித்து தமிழக ஆட்சி யாளர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. தமிழ்நாட்டில் நடக்கும் 'கொத்தடிமை ஆட்சியை', மத்திய பா.ஜ.க. ஆட்சி மிரட்டி, தமிழகத்தில் தேர்தலை சந்திக்காமலேயே பினாமி ஆட்சியை நடத்தி வருகிறது. மத்திய அரசில் பிரதமர் அலுவலகத்திலிருந்தும் ஏனைய துறைகளிலிருந்தும் பா.ஜ.க.வின் நம்பிக்கைப் பெற்ற உயர் அதிகாரிகள் தமிழகத்தின் மிக முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அண்மையில் மத்திய அரசின் 'ஆயுஷ்' அமைச்சக அதிகாரியாக பணியாற்றிய ஓடெம்டே என்பவர், தமிழக அரசுப் பணிக்கு மாற்றப்பட்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளராகவும், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முன்னாள் உறுப்பினராக இருந்த அசோக் டோங்ரே தமிழ்நாட்டில் தொழில் முனைவோர் வளர்ச்சி நிறுவன இயக்குனராகவும், பிரதமர் மோடியின் கூடுதல் செயலாளராக பணியாற்றிய தமிழ்நாட்டைச் சார்ந்த டி.வி. சோமநாதன், தமிழ்நாட்டின் திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகளுக்கான துறையின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். டில்லியின் பிரதிநிதியான ஆளுநர் தமிழக அரசு அதிகாரிகளை அழைத்து நிர்வாகம் தொடர்பான ஆலோசனைகளை நடத்துகிறார்.

தமிழக அரசின் வேலை வாய்ப்புகளிலும் தமிழர் களுக்கான உரிமைகளை பறிக்கும் கொல்லைப்புற முயற்சிகள் தொடங்கிவிட்டன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகம் தமிழ்நாட்டுக்கான வேலை வாய்ப்புகளில் தமிழ் எழுதப் படிக்கவே தெரியாதவராக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். தேர்வு பெற்று இரண்டாண்டுகளில் தமிழ் கற்றால் போதும் என்று அறிவித்திருக்கிறது. இதற்காக விதிகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக் கின்றன. நேபாளம், பூட்டான் ஆகிய வெளி நாட்டினரும் தமிழக அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று தேர்வாணைய அறிவிப்பு கூறுகிறது என்றால், தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் இளைஞர்கள் எதிர்காலம் எக்கேடு கெட்டால் என்ன என்றே ஆட்சியாளர்கள் கருதுகிறார்களா? 'நீட்' தேர்வின் வழியாக தமிழக உரிமைகள் பாதிக்கப்பட்டது போன்ற அதே செயல்பாடுகள் தேர்வாணைய அறிவிப்பிலும் நுழைந்திருப்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் 'பாலிடெக்னிக்குகளில்;' விரிவுரை யாளர் பதவிக்கு இதே போல் திறந்த போட்டியில் வடமாநிலத்தவர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். கடும் எதிர்ப்புக்குப் பிறகு இதற்கான நியமனங்களை நிறுத்தி வைத்திருப்பதாக 'அரசு ஆசிரியர் தேர்வு வாரியம்' இப்போது அறிவித்திருக்கிறது.

இவை மட்டுமல்ல, மத்திய அரசால் நடத்தப்படும் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனங்களுக்கான அய்.அய்.டி. கூட்டு நுழைவுத் தேர்வுகளை (ஐ.ஐ.டி. - ஜே.இ.இ.) ஆங்கிலம், இந்தி தவிர, தொடர்ந்து அய்ந்தாவது ஆண்டாக, குஜராத்தி மாநில மொழிக்கு மட்டும் தனிச் சலுகை அளித்து தேர்வு நடத்தப்படுகிறது. மாநில மொழிகளில் குஜராத் மட்டும் விதிவிலக்கு பெற்றிருக்கிறதா? தமிழ் மொழியிலும் இந்த கூட்டு நுழைவுத் தேர்வுகளை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு காது கொடுத்து கேட்கத் தயாராக இல்லை. 2013ஆம் ஆண்டு குஜராத்தி மொழியில் (வழக்கமாக நடத்தப்படும் ஆங்கில, இந்தி மொழிகளைத் தவிர) நடத்த வேண்டும் என்று குஜராத் அரசின் கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்டு விட்டார்கள். கடந்த 2012 ஆம் ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சி, அய்.அய்.டி. நுழைவுத் தேர்வு உள்ளிட்ட அனைத்து வகையான நுழைவுத் தேர்வுகளையும் தமிழ் மொழியிலும் நடத்தக் கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தலைமையிலான அமர்வு, இந்தக் கோரிக்கையை நடுவண் அரசும், தேர்வாணை யங்களும் பரிசீலித்து, கோரிக்கைக்கு சாதகமான முடிவை எடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. தீர்ப்பு மதிக்கப்படவில்லை.

தேசிய அளவிலான தேர்ச்சி விகிதங்களில் தமிழ்நாட்டு மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதற்கான காரணங்களில் ஒன்று - தமிழில் தேர்வு நடத்தப்படாமையும் ஆகும். இதில் தமிழ்நாடு அரசும் எந்த கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். போன்ற 'அனைத்து இந்தியப் பணி களுக்கான' தேர்வுகளை தமிழில் எழுதும் வாய்ப்புகள் இருக்கும்போது உயர் தொழில்நுட்பக் கல்விக்கான நுழைவுத் தேர்வுகளை மாநில மொழிகளில் எழுத அனுமதி மறுப்பதும், 'குஜராத்தி' மொழிக்கு மட்டும் தனி சலுகை காட்டுவதும் என்ன நியாயம்?

இதே அநீதியை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமும் தொடர்ந்து இழைத்து வருவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். 145க்கும் மேற்பட்ட மத்திய அரசு நிறுவனங்களுக்கு, பல கட்ட தேர்வுகளை நடத்தி ஊழியர்களை பணியமர்த்தும் இந்த ஆணையம் 7 மண்டலங்கள், 2 துணை மண்டலங்களுடன் செயல்படு கிறது. மண்டல அளவில் தேர்வுகள் நடத்தப்பட்டதால் மத்திய அரசின் துறைகளில் அந்தந்த மண்டலங்களுக்கு உட்பட்ட மாநிலங்களைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன. 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு மண்டல வாரியாக நடத்தப்பட்ட தேர்வுகள் நிறுத்தப்பட்டன. அனைத்து இந்திய அளவிலான தேர்வுகளாக மாற்றப்பட்டன. இதனால் இந்தி மொழிக்காரர்களும், வடநாட்டுக் காரர்களுமே மத்திய அரசு வேலை வாய்ப்புகளை பெருமளவில் கைப்பற்றிக் கொண்டனர். உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பே இதற்குக் காரணம் என்று கூறினார்கள்.

அதே தீர்ப்பில் மண்டலங்களில் வழங்கப்படும் வேலை வாய்ப்புகளைப் பாதிக்காமல் அகில இந்திய அளவில் தேர்வுகளை நடத்தலாம் என்று உச்சநீதி மன்றம் பரிந்துரை செய்திருந்தது. ஆனால், மாநில அளவிலான வேலை வாய்ப்புகளை ஒழிக்க வேண்டும் என்ற வாய்ப்புக்காகவே காத்திருந்தவர் களிடம் இந்த பரிந்துரைகளை நிறைவேற்றுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இப்போது மற்றொரு செய்தி வெளி வந்திருக்கிறது. இது தமிழக அரசு தேர்வாணைய அறிவிப்பைப்போல் இழைத்துள்ள மற்றொரு துரோகம். தமிழக அரசுத் துறைகளான சுகாதாரம், பொதுப் பணி, ஆவின், குடிநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம் உள்ளிட்ட துறைகள் மற்றும் நிறுவனங்களில் காலியாக உள்ள 3 இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை அரசே நேரடியாக நிரப்பாமல் 'அயல்பணி முறை' (Out sourcing) வழியாக நிரப்பி வருகிறது என்ற அதிர்ச்சியான தகவல் வந்திருக்கிறது. (எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் ஒரு அறிக்கையில் இதை சுட்டிக் காட்டியிருக்கிறார்)

தனியார் ஏஜென்சிகளிடம் இந்தப் பணி நியமனங் களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டுவிட்டன. அந்த நிறுவனங்கள் மாத ஊதியம் 25 ஆயிரம், 30 ஆயிரம் எனக் கூறி பணியில் அமர்த்தி, வெறும் ரூ.7 ஆயிரம், 8 ஆயிரம் மட்டுமே ஊதியமாக வழங்கிவிட்டு மீதிப் பணத்தை அந்த நிறுவனங்களும் இடைத் தரகர்களும் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். நிரந்தரப் பணியோ, அரசு ஊழியர்களுக்கான சலுகைகளோ இல்லாமல், எந்த நேரத்திலும் பணியிழப்பை சந்திக்கும் அவலத்துக்கு தமிழக இளைஞர்கள் தள்ளப்பட் டுள்ளார்கள்.

மாநில அரசும், மத்திய அரசும் போட்டிப் போட்டுக் கொண்டு தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பு உரிமைகளைப் பறிப்பதோடு மட்டுமல்லாமல், இந்திக்காரர்களுக்கு கதவைத் திறந்து விடும் தீவிர செயல் திட்டங்களையும் தொடங்கி விட்டார்கள்.

தமிழகம் - என்ன செய்யப் போகிறது? தமிழக இளைஞர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களா?

## ஜோயல் பிரகாஷ் மரணத்துக்கு நீதி கேட்டு விழுப்புரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

ஜோயல் பிரகாஷ் மரணத்திற்கு நீதி கேட்டு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 25.11.17 காலை 11 மணியளவில் வளவனூரில் நடைபெற்றது. தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார், விழுப்புரம் மேற்கு மாவட்டத் தலைவர் மதியழகன், கடலூர் மாவட்ட செயலாளர் பாரதிதாசன், பெரியார் சாக்ரட்டீஸ், அமைப்பாளர் சாமிதுரை, இரவி கார்த்திகேயன், கோகுல்காந்திநாத், ஜெயக்குமார் பெரியார் தி.வி.க, பெரியார் சிந்தனையாளர் இயக்கம் தினா, பரத் மற்றும் தோழர்கள், தலித் பாதுகாப்பு இயக்கம் பிரகாஷ், தமிழக வாழ்வுரிமை கட்சி புதுச்சேரி கொள்கை பரப்பு செயலாளர் விஜி மற்றும் விழுப்புரம் அஜி மற்றும் தலைகல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர் லூசியா, மருத்துவர் தீரன் வினோத், வனத்தாம் பாளையம் பெரியார் ஜெயரட்சகன் சிறீதர், பாபு, லாஸ் பேட்டை மாணிக்கம், திருமுருகன், திருவண்டார் கோயில் விஜயன், கிருஷ்ணராஜ், மற்றும் மேற்கு மாவட்ட தி.வி.க தோழர்கள் மற்றும் விழுப்புரம் புதுச்சேரி பகுதி தோழர்கள் திரளாக வந்து கலந்து கொண்டனர்.

# குடியாத்தத்தில் அம்பேத்கர்– பெரியார் கருத்தரங்கம்

12-11-2017 ஞாயிறு அன்று மாலை 6.00 மணி யளவில், குடியாத்தம் அம்பேத்கர் மண்டபத்தில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், அம்பேத்கர்-பெரியார் நினைவு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் ஆசிரியர் அருணிடம் பயிற்சி பெற்ற மாணவர்களின் பறை முழக்கம் நடந்தது. அதனைத் தொடர்ந்து பெரியாரிய விழுது யாழினி உள்ளிட்ட பலரும், வேலூர் கற்பி பாசறை பாலா, வழக்குரைஞர் அருண், பரப்புரை செயலர் பால் பிரபாகரன் ஆகியோரும் உரையாற்றினர். கழகத் தோழர்களின் "இப்பெல்லாம் யாருங்க ஜாதி பாக்குறாங்க" என்ற வீதிநாடகம் நிகழ்த்தப்பட்டது.

இந்து மதவெறி துறைத் தலைவரின் ஜாதியப் பாகுபாட்டு வன்முறை காரணமாக, தன் வாழ்வை முடித்துக் கொண்ட, வேலூரைச் சேர்ந்த சென்னை, கவின்கலைக் கல்லூரி மாணவர் ஜோயல் (எ) பிரகாசின் படத்தை, பள்ளிகொண்டா தளபதி கிருஷ்ணசாமியுடன் பணியாற்றிய பெரியவர் மோகன் திறந்துவைத்தார்.

"பெரியாரின் ஜாதி ஒழிப்புப் பணிகள்" என்ற தலைப்பில் உரையாற்றிய நீலப் புலிகள் இயக்கத் தலைவர் பேராசிரியர் டி.எம்.புரட்சிமணி, பெரியார் மீது வைக்கப்படும் விமரிசனங்களுக்கு உரிய பதில்களைக் கூறி விளக்கியதோடு, பெரியாரின் ஜாதியொழிப்புப் பணிகளால் தமிழகம், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்ற பயன்களை விளக்கி உரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி "அம்பேத்கரின் ஜாதியொழிப்புப் பணிகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார். நிகழ்வு இரவு 9-00 மணிக்கு நிறைவடைந்தது.

## மதுக்கூர் மைதீன் நினைவேந்தல்

10-11-2017 அன்று மாலை 6-00 மணியளவில், உயர்நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் இயக்கம், உயர்நீதி மன்றத்தில் தமிழ் போராட்டக் குழு ஆகியவற்றின் சார்பாக, மதுரை மாட்டுத் தாவணி பேருந்து நிலையம் அருகே உள்ள இராமசுப்பு அரங்கத்தில், இஸ்லாமிய ஜனநாயக முன்னணியின் தலைவர் மதுக்கூர் மைதீன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு, உயர்நீதி மன்றத்தில் தமிழ் மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மீ.தா.பாண்டியனின் தலைமை யில் நடைபெற்றது.

மதுக்கூர் மைதீன் படத்தை உயர்நீதி மன்றத்தில் தமிழ் போராட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் கு.ஞா.பகத்சிங் திறந்து வைத்தார். இளந்தமிழகம் இயக்கத்தின் ரபீக் ராஜா, இஸ்லாமிய ஜனநாயக முன்னணியின் துணைத் தலைவர் நத்தம் சேக் பரீத், மருது மக்கள் இயக்கத்தின் முத்துபாண்டி, தமிழர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் இமயம் சரவணன், வழக்குரைஞர் எழிலரசு உள்ளிட்ட பலரும் நினைவேந்தல் உரையாற்றினர். இறுதியாக உரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வளர்ந்துவரும் கூலிப்படை கலாச்சாரம், செய்தியை சேகரிக்காமல் காவல்துறையின் கருத்தையே செய்தியாக்கும் ஊடகங்களின் கேவலப் போக்கு ஆகியவற்றை விரிவாக விளக்கிப் பேசினார். தமிழை நீதிமன்ற மொழியாக்கவேண்டிய தேவையை விளக்கி 1956இல் பெரியார் எழுதிய தலையங்கக் கட்டுரை செய்திகளையும் எடுத்துரைத்தார். மதுரை, பழனி ஆகிய பகுதிகளைச் சார்ந்த தோழர்கள் நிகழ்வுக்குத் திரளாக வந்திருந்தனர்.

சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட தோழர் மதுக்கூர் மைதீன் அவர்கள் தமிழை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக்கு எனும் கோரிக்கையோடு, 27-7-2017 முதல் 4-8-2017 முடிய ஒன்பது நாட்கள் நீடித்த (தனது மார்க்கத்தின் விதிகளுக்கு உடன்பாடில்லாத) பட்டினிப் போரில் பங்கேற்றவர் ஆவார்.

## விழுப்புரத்தில் ஜாதி ஒழிப்புப் போராளிகளுக்கு வீர வணக்க நாள்

விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பெரியார் தலைமையில் ஜாதி ஒழிப்பிற்காக சட்ட எரிப்பு போராட்டத்தில் உயிர்நீத்த, சிறைசென்ற போராளிகள் 60 ஆம் ஆண்டு நினைவும் தமிழீழத் தலைவன் பிரபாகரன் 63 ஆவது பிறந்தநாள் நிகழ்வும் 26.11.17 காலை 10 மணியளவில் வனத்தாம்பாளையத்தில் நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் ஜெயரட்சகன், மாவட்ட செயலாளர் இராவண இராமன், மாவட்ட அமைப்பாளர் சிறீதர் நிவேதிதா, பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தலைவர் தீனா, பெலிக்ஸ், கிளை பொறுப்பாளர்கள் பாபு, தமிழ், சிறீநாத், விசிக பொறுப்பாளர் தெய்வ நாயகம் மற்றும் அப்பகுதித் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

# டிசம்பர் 1, தமிழ்நாடு தேர்வாணையத்தைக் கண்டித்து மாவட்டத் தலைநகர்களில் கழகம் ஆர்ப்பாட்டம்

**தமிழக அரசே!**

**அரசுப் பணியாளர் தேர்வாணையமே!**

**தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்புகளை வட நாட்டாருக்கு வாரி வழங்காதே!**

*தமிழ்நாட்டில் 85 இலட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் போது தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், 9351 மாநில அரசுப் பணிகளுக்கு தமிழ்மொழி தெரியாவிட்டாலும் பரவாயில்லை, மனுப் போடலாம் என இந்தியா முழுமையிலிருந்தும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.*

*நேபாளம், பூட்டான் போன்ற அன்னிய நாட்டினரும் மனுப் போடலாம் என்றும், பணி நியமனம் பெற்று இரண்டு ஆண்டுகளில் தமிழைக் கற்றுக் கொண்டால் போதும் எனவும் கூறுகிறது அந்த அறிவிப்பு.*

*தமிழ்மொழி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும் என்று இருந்த நிபந்தனையை இப்போது மாற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது?. திறந்த போட்டிக்கு மட்டும்தான் இந்த அறிவிப்பு என்று தேர்வாணையம் கூறும் சமாதானத்தை எப்படி ஏற்க முடியும்? திறந்த போட்டியிலும் தமிழ் நாட்டைச் சார்ந்த முன்னேறிய பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளை வடநாட்டார் பறித்துக் கொள்ளலாமா?*

*ஏற்கனவே கருநாடகம், குஜராத், மராட்டியம், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்கள் மாநில மக்களுக்கே வேலை வாய்ப்புகளை உறுதி செய்து சட்டம் இயற்றியுள்ளன.*

*தமிழ்நாட்டில் தொடர் வண்டித் துறை, அஞ்சல்துறை, வருமானவரித் துறை, சுங்கம் மற்றும் கலால்துறை உள்ளிட்ட மத்திய அரசு அலுவலகங்களில் வடநாட்டுக்காரர்கள் ஆதிக்கம் குவிந்து கிடக்கும்போது தமிழக வேலை வாய்ப்புகளையும் வடநாட்டுக் காரர்களுக்கு கதவு திறந்து விடுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?*

*தமிழக அரசு 'பாலிடெக்னிக்' விரிவுரையாளர் பதவிகளில் இதே போல் திறந்த போட்டியில் வட நாட்டுக்காரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு, கடும் எதிர்ப்பு உருவான தால், நியமனங்களை இப்போது தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணையம் நிறுத்தி வைத்துள்ளது. அதே போன்று-*

**தமிழக தேர்வாணையமே!**

**மாநில அரசுப்பணிக்கான தேர்வு அறிவிப்பைத் திரும்பப்பெறு!**

**2018 பிப்ரவரியில் நடக்க விருக்கும் தேர்வுகளை ரத்து செய்!**

**தமிழக அரசே!**

**மண்ணின் மைந்தர்களுக்கே வேலை வாய்ப்புகளை உறுதி செய்து சட்டமியற்று!**

**தமிழக இளைஞர்களே!**

**உரிமைக்கு போராட திரண்டு வாரீர்!**

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

## குடிசைப் பகுதி மக்களின் கட்டாய வெளியேற்றத்தைக் கண்டித்து முதல்வர் வீடு முற்றுகை: தோழர்கள் கைது

சென்னை ஆயிரம் விளக்கு பகுதிகளில் அமைந்துள்ள திடீர் நகர், மக்கீஸ் தோட்டம் பகுதி குடியிருப்பில் வசிக்கும் மக்களை அப்புறப்படுத்தி கார்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கும் தமிழக அரசை கண்டித்து.....

25.11.2017 அன்று காலை 11 மணிக்கு பசுமை வழிச் சாலையில் அமைந்துள்ள தமிழக முதலமைச்சர் இல்லத்தை திராவிடர் விடுதலைக் கழகத்தை சார்ந்த பொறுப்பாளர்கள், தென் சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, வடசென்னை மாவட்ட செயலாளர் செந்தில் (எப்.டி.எல்.), தலைவர் ஏசுகுமார், மயிலை தோழர்கள் மாரி, சுகுமார், இராவணன், சிவா, குமரேசன், ஜா. உமாபதி, மாணிக்கம், யுவராஜ், இலட்சுமணன், தேன்ராஜ் உள்ளிட்ட கழகத்தினர், தமிழ்நாடு இளைஞர்கள் இயக்கம் ராஜா, அம்பேத்கர் மக்கள்




படை மதிபறையனார், இளந்தமிழகம் செந்தில், பச்சைத் தமிழகம் மற்றும் பல்வேறு இயக்கத்தை சார்ந்த தோழர்கள் ஒன்றிணைந்து முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமிழக அரசுக்கு எதிராக முழக்கத்தை எழுப்பினர்.

தமிழக அரசுக்கு எதிராக முழக்கத்தை எழுப்பி, முதலமைச்சர் இல்லத்தை முற்றுகையிட முயன்ற தோழர்கள் அனைவரும் பசுமை வழிச் சாலை அருகே கைது செய்யப்பட்டு ஆழ்வார் பேட்டை பகுதியில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## கருஞ்சட்டைகளோடு நிற்கையில் கர்ப்பப் பைக்குள் இருப்பதாகவே உணருகிறேன்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மீது அச்சமிருக்காது என்பதை இந்தச் செய்தி படித்த போது புரிந்து கொண்டேன்.

பெரியார் மீதான பாசம் மட்டுமே பெரியசாமியை உருவாகியிருக்காது. அதையும் தாண்டி பெரியார் தந்த கருத்தியல், கொள்கை மீது அவன் ஆழமான பிடிப்புக்கொண்டிருக்கிறான். அது உயிருக்கு அஞ்சாத வீரனாக அவனை உருவாக்கி இருக்கிறது. இன்றும் பெரியார் மீதான பாசத்தை விட அவர் தந்த கொள்கை இலட்சியத்தை உயிர் போல் நேசிக்க வேண்டும் என்ற செய்தியை நான் கற்றுக் கொண்டேன்.

பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை வேரிலேயே கிள்ளி எறிவதற்காக சட்டத்தை பெரியார் எரித்தார். சட்டத்தின் புனிதம் காத்துக்கொண்டே சாதியை ஒழிக்க முடியாது என்றும் இதனை புரிந்து கொள்ளலாம். நமது அண்ணல் அம்பேத்கர் வரைந்த சட்டம் என்று பெரியார் பார்க்கவில்லை. அம்பேத்கர் கோவித்துக் கொள்வார் என்று பெரியார் யோசிக்கவில்லை. அம்பேத்கர் இந்த சட்டத்தை எழுதி இருந்தாலும் இந்தச் சட்டம் கொளுத்தப்பட்டால் அவரே மகிழ்ச்சி அடைவார் என்று பெரியாருக்குத் தெரியும் என்றுதான் நான் புரிந்து கொள்கிறேன்.

ஏனென்றால் அம்பேத்கரே இந்தச் சட்டத்தை நான்தான் எழுதினேன் என்று எல்லோரும் சொல்கிறார்கள், நான் எழுதினேன் என் கைகளை பார்ப்பனர்கள் பிடித்துக் கொண்டார்கள். நாளை இந்தச் சட்டத்தை எரிக்கும் முதல் ஆளாக நானே இருப்பான் என்று சொல்லியிருக்கிறார். அம்பேத்கர் கனவை பெரியார் நிறைவேற்றி இருக்கிறார்.

இந்தச் செய்திகள் எனக்கு ஒன்றை புரிய வைக்கிறது. இந்திய அரசமைப்பு சட்டம் இருக்கும் வரை சாதி இருக்கும். அதனால்தான் சாதி ஒழிப்புக்காகவே வாழ்நாள் எல்லாம் போராடிய பெரியாரும் அம்பேத்கரும் இந்தச் சட்டத்தை கொளுத்தத் துணிந்திருக்கிறார்கள்.

பெரியார் சொல்வது போல் இந்தச் சட்டத்தை வரைந்த ஆறு பேரில் பெரும்பாலானவர்கள் பார்ப்பனர்கள். டி.டி.கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், என்.கோபால்சாமி அய்யங்கார், கே.எம். முன்ஷி என நான்கு பேரும் பார்ப்பனர்கள்.

முஹம்மது சாதுல்லா இசுலாமியர். இன்னொருவர் அம்பேத்கர். வயதுக்கு வந்தோருக்கான வாக்குரிமை அனைவருக்கும் இல்லாத காலத்தில் இந்தச் சட்டம் எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் சட்டத்தை எழுதியவர்களை எந்த சனநாயக வழிமுறையின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கவில்லை. அப்படி யானால் ஜனநாயகத்துக்கு முற்றிலும் புறம்பாக இந்த சட்டம் வரையப்பட்டுள்ளது. பிறகு எப்படி இதை சனநாயக நாடு என்று சொல்கிறார்கள் என்று புரியவில்லை.

பெரியாரின் கேள்விகளையே இங்கே மீண்டும் முன் வைக்கிறேன். இந்தச் சட்டம் எழுதப்படும் போது எளிய மக்களிடம் ஏன் கலந்து கொள்ளவில்லை? அவர்கள் சார்பில் அந்த அவையில் ஒருவர் கூட இடம்பெறாதது ஏன்? ஒருவர் கூட இல்லாதபோது இது எப்படி எல்லோருக்குமான சட்டமாக இருக்க முடியும்?

எங்கள் பங்கேற்பு இல்லாத சட்டம் எங்களுக்கான சட்டமாக எப்படி இருக்க முடியும்? இந்தக் கேள்விகளுக்கு விடையை பெரியவர்கள் எனக்குச் சொல்ல வேண்டும். பெரியார் இன்னொன்றும் சொல்கிறார் மனுதர்மத்தின் மறுப்பதிப்பே இந்த அரசமைப்பு சட்டம் என்று.

இந்த சட்டம் எதுவுமே பயன் இல்லை என்று சொல்லமாட்டேன். என் வழக்குத் தீர்ப்பு வருகிற திசம்பர் 12 ஆம் தேதி வர இருக்கிறது. நம்பிக்கையோடு காத்துக்கொண்டுள்ளேன். என் பெற்றோருக்கு தண்டனை வாங்கித் தருவது அல்ல என் காத்திருப்புக்கு காரணம். அந்தத் தீர்ப்பு அவர்களுக்கு எதிராக வந்தால்தான் சாதிய கௌரவக் கொலைகளுக்கு எதிரான சட்டம் வர அடிப்படையாய் இருக்கும். அதுவும் இந்த அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவதுதான். பேரறிவாளன் அவர்களின் தூக்கு ஆயுளாக இந்த சட்டத்தின் கீழ்தான் மாறியிருக்கிறது. நாளை அவர் இதன் அடிப்படையில் விடுதலை ஆவார் என்று நம்பி காத்திருக்கிறோம். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் இது ஏதும் நம் பெரியாருக்குத் தெரியாதா என்ன? அடிப்படையில் இது மனுதர்மத்தின் மறுபதிப்புதான். தமிழர்களை நிரந்தர அடிமைகளாக வைத்திருப்பதுதான். அதனால்தான் பெரியார் இந்திய அரசை பார்ப்பனிய அரசு என்கிறார்.

இதிலிருந்து நாம் பெரியார் அரசியலை எடுத்துக் கொண்டு போவோம். இந்திய அரசமைப்புச் சட்டத்தை கொளுத்தினார், தமிழ்நாட்டை நீக்கி வைத்து இந்திய வரைபடத்தை கொளுத்தினார், ஆகஸ்ட் 15 ஆம் நாளை தமிழர்களுக்கு துக்க நாள் என்றார். இந்தியா இருக்கும் வரை சாதி இருக்கும் என்றார். இதன் அடிப்படையில் 1956 லிருந்து சாகும் வரைக்கும் தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்கினார்.

பெரியாருக்கு கடவுள் மீது எந்தக் கோபமும் இல்லை. கடவுள் நேரில் வந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது இருக்கிறார் என்று சொல்லிவிட்டு போகிறேன் என்று பதில் சொல்கிறார். இந்து மதத்தின் மீது தனிப்பட்ட கோபம் இல்லை. அதை பின்பற்றி யவர்களை மதித்து நடந்திருக்கிறார். காந்தியவர்கள் மீது எந்தக் கோபமும் இல்லை. இந்த நாட்டுக்கு காந்தி தேசம் எனப் பெயரிடவேண்டும் என்கிறார். அதேபோல் இந்தியா மீதும் பெரியாருக்கு எந்தக் கோபமும் இல்லை. சாதி ஒழிப்பு என்ற ஒரே நோக்கத்திற்காக இவற்றையெல்லாம், எதிர்த்தார். ஒழிப்பேன் என்றார். அதேபோல் சாதி ஒழிப்புக்காகத்தான் இந்தியாவையும் எதிர்த்தார் இந்தியாவை ஒழிப்பேன் என்றார். இதுதான் என் புரிதல்.

'பெரியார் இன்றும் என்றும்' நூலில் தமிழ்நாடு தமிழருக்கே என்பதை பச்சை குத்திக்கொள்ளச் சொல்கிறார். சிறைக்கும் சாவுக்கும் அஞ்சாமல் இளைஞர்கள் விடுதலைக்கு அணிதிரள வேண்டும் என்கிறார். நம்மையே கொடுத்துப் போராடாமல் விடுதலை பெற முடியாது என்கிறார். பெரியாரால் பெரியசாமி போன்ற சிறியவர்களைக் கூட வீரர்களாக உருவாக்க முடிந்திருக்கிறது. நாமும் பெரியாரின் உண்மைத் தொண்டனாக அந்தப் பெரியசாமி போல் உருவாக வேண்டும். சாதி ஒழிக்க களத்திற்கு அணியமாவோம். தமிழ்நாடு தமிழருக்கே என்பதை உயிராய்க் கொள்வோம். இதுதான் சட்ட எரிப்பு போராளிகளுக்கு நாம் செய்யும் வீரவணக்கமாக இருக்கும். நான் உங்களோடு இன்று போல் வாழ்நாள் முழுக்க கைகோர்த்து நிற்பேன்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## விடுதலைப் புலிகளின் முதல் இராணுவப் பயிற்சி முகாம் நடந்த பகுதியில் ‘மாவீரர் நினைவகம்’ அமைகிறது

# புலியூரில் உணர்ச்சிப் பெருக்குடன் ‘மாவீரர் நாள்’

சேலம் மாவட்டம், கொளத்தூர் ‘தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு’ சார்பில் நவம்பர் 27ஆம் தேதி, மாவீரர் நாள் புலியூர் பிரிவில் உணர்ச்சியுடன் நடந்தது. கொளத்தூர் - புலியூர் பிரிவுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு. இந்தப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் இராணுவப் பயிற்சி முகாம் 1983 முதல் 1986ஆம் ஆண்டு வரை நடந்தது. விடுதலைப் புலிகளின் முன்னணி தளபதி பொன்னம்மான், வழிகாட்டுதலில் நடந்த இந்த முகாமில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணி தலைவர்கள் பயிற்சி பெற்றனர். மேதகு பிரபாகரன் பலமுறை முகாமுக்கு வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அப்போது திராவிடர் கழகத்தில் செயல்பட்டு வந்தார். அவருக்கு உரிமையான தோட்டத்தில்தான் மூன்று ஆண்டுகள் பயிற்சிகள் நடந்தன. பெரியார் இயக்கத் தோழர்களின் முழு ஒத்துழைப்போடு இந்த முகாம் நடந்தது. உள்ளூர் பகுதி வாழ் மக்களின் ஆதரவோடும், கட்சிகளைக் கடந்த இன உணர்வாளர்கள் அர்ப்பணிப்புடன் உதவினர்.

பயிற்சித் தளபதி பொன்னம்மான், ஈழப்போராட்டக் களத்தில் மரணத்தைத் தழுவினார். அவரது நினைவாக புலியூர் பகுதியில் நினைவு நிழற்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த நினைவு கூடத்தில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27ஆம் நாள் மாலை 6.05 மணியளவில் மாவீரர் நினைவாக உணர்வாளர்கள், பெரியார் இயக்கத்தினர் மெழுகுவர்த்தி ஏற்றி மாவீரர் நாளை நடத்தி வருகிறார்கள். 1989 ஆம் ஆண்டு தமிழீழத்தின் வனப் பகுதியில் தலைமறைவாக இருந்த மேதகு பிரபாகரன், முதன்முதலாக மாவீரர் நாள் குறித்த அறிவிப்பை வெளியிட்டார். அந்நிகழ்வுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அழைக்கப்பட்டிருந்தார். அவர் ஈழம் சென்று 15 நாள்கள் தங்கியிருந்து திரும்பினார். அப்போது இந்திய இராணுவம் தமிழீழப் பகுதியை ஆக்கிரமித்து, சிங்கள அரசுக்கு ஆதரவாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர்களுக்கு ஆதரவாக இருந்து வந்த தமிழீழ மக்களையும் கொன்றொழிக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தது.

பிரபாகரன் உயிரைக் குறி வைத்து இந்திய இராணுவம் தேடுதல் வேட்டையில் இறங்கியிருந்த நேரம். அப்போது முதலாவது விடுதலைப்புலி போராளி சங்கர் மரணமடைந்த நவம்பர் 27அய்



மாவீரர் நாளாக பிரகடனப்படுத்தினார். அந்த பிரகடன உரையில், “எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கிய நாள். இது வரை 1207 போராளிகளை இழந்திருக்கிறோம். முதல் முறையாக இந்த மாவீரர் நாளை ஆரம்பித்துள்ளோம்” என்று அறிவித்தார். அந்த உரையில், “வழமையாக மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள், இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லா போராளிகளும் சமம் எனும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் ஒரே நாளில் வைப்பதால் எமது இயக்கத்தில் இருந்து வீரச் சாவுஅடைந்த தலைவர்களில் இருந்து, சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம்” என்று உலகம் முழுதும் ஒரே நாளில் ஒரே நோக்கில் ‘மாவீரர் நாள்’ கடைபிடிக்கும் முறையை ஏன் கொண்டு வந்தோம் என்பதற்கான காரணங்களை விளக்கினார்.

1990ஆம் ஆண்டிலிருந்து புலியூர் பிரிவில் கழகத் தோழர்கள், உணர்வாளர்களை ஒருங்கிணைத்து, ‘மாவீரர் நாளை’ உணர்ச்சியுடன் நடத்தி வருகிறார்கள். ராஜீவ் கொலை நடந்த அந்த கடுமையான கெடுபிடி நேரங்களிலும் கூட புலியூர் மாவீரர் நாளைக் கண்டது. கடந்த மூன்று ஆண்டுகளாக காவல்துறை அனுமதி மறுத்த நிலையிலும் உயர்நீதி மன்றத்தின் வழியாக முன் அனுமதி பெற்று நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு நிகழ்வில் ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரசுவதி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று மாவீரர்களுக்கான சுடர் ஏற்றி, சிறப்புரை நிகழ்த்தினார். இலங்கை அரசின் தமிழர்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறை, தேசிய சுயநிர்ணய உரிமை, ஈழப் பிரச்சினையில் சர்வதேசங்களின் துரோகம் மற்றும் இந்திய அரசின் துரோகத்தை அம்பலப்படுத்தியும், இலங்கை அரசு கொண்டுவர முயற்சிக்கும் புதிய அரசியல் சட்டம் ஈழத் தமிழர் அடையாளத்தையே முற்றாக ஒழிப்பதையும் சுட்டிக்காட்டி 45 நிமிடங்கள் விரிவாகப் பேசினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெரியார் இயக்கத்தின் பங்கினையும் புலிகளுக்கான முதல் இராணுவப் பயிற்சியை மூன்று ஆண்டு காலம் புலியூரில் நடத்துவதற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தோழர்களோடு முன்னின்று உதவியதையும் சுட்டிக் காட்டினார்.

5 மணியிலிருந்து நிகழ்ச்சிக்கு தோழர்கள் குடும்பம் குடும்பமாக வரத் தொடங்கினர். பெண்கள் ஏராளமாக நீண்ட கியூ வரிசையில் நின்று சுடர் ஏற்றினர். சரியாக 6.05 மணிக்கு மாவீரர்களுக்கான பாடல் ஒலிக்கத் தொடங்கியது. ஈழத்துக் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ஒவ்வொரு வரியும் இதயத்தை ஈட்டியால் துளைத்து கண்களில் நீரைத் ததும்ப வைத்தது. 40 நிமிடம் வரை சுடர் ஏற்றம் நிகழ்வு நீடித்தது. நிகழ்வுக்கு போராட்டக் காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு பெரும் உதவிகளை செய்தவரும், திராவிடர் கழக மண்டல அமைப்புச் செயலாளருமான ப. பிரகலாதன் தலைமை தாங்கினார்.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் முதல் இராணுவப் பயிற்சி நடந்த பகுதியில் அதன் வரலாற்று நினைவாக மாவீரர் நினைவகம் ஒன்றை எழுப்ப, தோழர்கள், உணர்வாளர்களுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் இனி எதிர்காலங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள், அந்த நினைவகத்திலேயே நிகழும் என்றும் அறிவித்தார். தனது குடும்ப சார்பில் ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடையும் அறிவித்தார். குருவாரெட்டியூர் பகுதி வாழ் மக்கள் சார்பில் கழகப் பொறுப்பாளர் நாத்திக ஜோதி, திராவிடர் கழக மண்டல அமைப்பாளர் ப. பிரகலாதன் இணைந்து ரூ.1,00,000/-மும், கழகத் தோழர் ஏற்காடு பெருமாள் ரூ.30,000/-மும் நன்கொடையாக வழங்குவதாக நிகழ்விலேயே அறிவித்தனர்.

நிகழ்வுக்கு திரண்டிருந்த பொது மக்கள், கழகக் குடும்பத்தினருக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. திறந்த வெளியில் தரையில் பெரும் கூட்டமாய் அமர்ந்து மக்கள் உரைகளை செவிமடுத்தனர். கழக ஒன்றியத் தலைவர் செ.தர்மலிங்கம் நன்றி கூறினார்.

– நமது செய்தியாளர்

## டிசம்பர் 16இல் ஈரோட்டில் பெண்கள் சுயமரியாதை மாநாடு

இடம் : **வீரப்பன் சத்திரம், ஈரோடு மாலை 5 மணி**

வரவேற்புரை : **கவிப்பிரியா**

தலைமை : **மணிமேகலை**

முன்னிலை : **சங்கீதா, முத்துலட்சுமி**



உரை :

**சுப்புலட்சுமி ஜெகதீசன்**
(முன்னாள் மத்திய இணை அமைச்சர்-தி.மு.க.)

**பால பாரதி**
(முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)

**ஓவியா** (பெண்ணிய செயல்பாட்டாளர்)

**திவ்ய பாரதி** (ஆவணப்பட இயக்குனர்)

**ஆசிரியர் சிவகாமி** (தமிழ்நாடு அறிவியல் மன்றம்)

நிறைவுரை :

**கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன்**

நன்றியுரை : **சுமதி**

காஞ்சி மக்கள் மன்றத்தின் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள், பறையிசையோடு நிகழ்ச்சிகள் நடக்கும்.

ஏற்பாடு :

**திராவிடர் விடுதலைக் கழகம், ஈரோடு மாவட்டம் (தெற்கு)**

***தோழர்களே! மாநாட்டுக்கு திரண்டு வாரீர்!***

## “நிமிர்வோம்” வாசிப்பு வட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டத்தின் சார்பாக கழக மாத இதழான “நிமிர்வோம்” வாசிப்பு வட்டம் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் 19.11.2017 மாலை 6 மணிக்கு கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வை பெரியார் யுவராஜ் ஒருங்கிணைத்தார். வாசிப்பு வட்டத்தில் ‘நிமிர்வோம்’ ஜனவரி இதழ் குறித்து தோழர்கள் கார்த்திக் இராசேந்திரன், மதன்குமார், ராஜு, பிரகாஷ் குமார் ஆகியோர் தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். கட்டுரை மீது விவாதங்களையும் முன் வைத்துப் பேசினர். கவிஞர் இராமசாமி மற்றும் ‘நிமிர்வோம்’ நிர்வாக பொறுப்பாளர் இரா.உமாபதி (தென்சென்னை மாவட்ட செயலாளர்) இதழின் வளர்ச்சிக்கு கருத்துகளை கூறினர். இறுதியாக, திருவல்லிக்கேணி பகுதி தலைவர் இலட்சுமணன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th November 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN